# வெற்றிடங்கள்

## தேசிய கல்வி நிறுவனம்

### தகைமை வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேலதிக விபரங்களை www.nie.ac.lk இணையதளத்தில் "News & Events" பிரிவிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

தகைமை வாய்ந்த விண்ணப்பதாரர்கள் https://apps.nie.ac.lk எனும் NIE இணையதளத்திற்குப் பிரவேசித்து நிகழ்நிலை (online) விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பிரதியொன்றை பதிவிறக்கம் செய்து, அச்சுப் பிரதியொன்றை 2025-10-07ஆம் திகதி அல்லது அதற்கு முன் பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவனம், த.பெ. இல. 21, ஹைலெவல் வீதி, மஹரகம எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் கிடைக்கச் செய்ய வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் புறத்தில் விண்ணப்பிக்கும் பதவியை தயவு செய்து குறிப்பிடவும்.

கவனிக்கவும்: பொதுத் துறைகள், கூட்டுத்தாபனங்கள், நியதிகள் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரசாங்கத் திணைக்களங்களிலிருந்து விண்ணப்பிப்பவர்கள் தமது அமைப்பின் தலைமையின் ஊடாக அச்சுப்பிரதி விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

**அ. பதவிகள் : (01) பணிப்பாளர் (நிதி)**
**(02) பணிப்பாளர் (அச்சிடல் மற்றும் பிரசுரங்கள்)**
**(03) பணிப்பாளர் (பொறியியல் மற்றும் உதவி சேவைகள்)**
**சேவை வகுதி : சிரேஷ்ட முகாமையாளர் (HM 1-1)**

**ஆ. பதவி : (04) கணக்காய்வு உதவியாளர் III**
**சேவை வகுதி : முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் (MA2-2)**

**இ. பதவி : (05) முகாமைத்துவ உதவியாளர் III**
**(06) முன்பள்ளி ஆசிரியர் III**
**சேவை வகுதி : முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாத (MA1-2)**

**ஈ. பதவி : (07) சாரதி III**
**சேவை வகுதி : ஆரம்ப நிலை - திறனுடைய (PL 3)**

**உ. பதவி : (08) சமையலாளர் III**
**(09) அச்சு இயந்திர இயக்குநர் III**
**சேவை வகுதி : ஆரம்ப நிலை - அரைத் திறனுடைய (PL 2)**

**ஊ. பதவி : (10) அலுவலக உதவியாளர் III**
**சேவை வகுதி : ஆரம்ப நிலை - திறனற்ற (PL 1)**

**பொதுவான நிபந்தனைகள்**

- இலங்கைப் பிரஜையாகவிருத்தல் வேண்டும்.
- நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் மற்றும் பதவிக்குரித்தான கடமைகளைச் செய்வதற்கான உள மற்றும் உடல் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.
- சிறந்த நன்னடத்தையுடையவராகவிருத்தல் வேண்டும்.
- பிறப்புச் சான்றிதழ், கல்வி / தொழில்சார் சான்றிதழ்கள், அனுபவச் சான்றிதழ்கள் மற்றும் சேவைச் சான்றிதழ்களின் சான்றுபடுத்திய பிரதிகளுடன் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.
- இந்தப் பதவிகள் நிரந்தரமானவை என்பதுடன் தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு (EPF) தமது சம்பளத்தின் 8% பங்களிப்புச் செய்தல் வேண்டும் மற்றும் நிறுவனம் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு (EPF) 12% மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு (ETF) 3% பங்களிப்பு செய்யும்.
- அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக, நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய கல்வி நிறுவனம்.**